20.10.2017

# தமிழகம், புதுவையில் மழை வாய்ப்பு



தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வெப்பச் சலனம் காரணமாக ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகையில், "வங்கக் கடலில் உருவாகி இருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு திசையில் நகர்ந்து, ஒடிசா மாநில கடலோரப் பகுதியில் இன்று மாலை கரையைக் கடந்தது. இதன் தீவிரம் படிப்படியாக குறையும். இதன் காரணமாக, தமிழக கடலோரப் பகுதியில் இருந்த ஈரப்பதம் ஒடிசா நோக்கி சென்றதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை வாய்ப்பு குறைந்துள்ளது.

எனவே, அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வெப்பச் சலனம் காரணமாக ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில்

இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இன்று காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி, திண்டுக்கல் மாவட்டம் சத்ரபதியில் 1 செமீ மழை பதிவாகியுள்ளது" என்று அவர் கூறினார்.

## ஒடிசாவில் கரையை கடந்த காற்றழுத்தம்: தமிழகம் புதுவையில் ஓரிரு இடங்களில் மழை வாய்ப்பு




ஒடிசாவில் கரையை கடந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி, வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகியுள்ளது. இது தற்போது மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ளது. காலை (வியாழக்கிழமை) 8.30 மணி நிலவரப்படி, ஒடிசா மாநிலம் பூரியிலிருந்து 340 கி.மீ. தூரத்தில் மையம் கொண்டு இருந்தது. இந்த காற்றழுத்தம் மணிக்கு 11 கிமீ வேகத்தில் ஒடிசா நோக்கி நகர்ந்து வருகிறது. இது வெள்ளிக்கிழமை காலை, ஒடிசா மாநிலம் பூரி மற்றும் சந்த்பலி ஆகிய கடலோரப் பகுதிகளுக்கு இடையே கரையை கடந்தது. அதன் பின்னர், அடுத்த 18

மணி நேரத்தில் இந்த காற்றழுத்தம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளது.

அதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரை வானம் பொதுவாக லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும்.